கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.212/2021**

( CNR No.TNTL-1D-000645-2021 )

ராமச்சந்திரன் … வாதி

..எதிர்..

ஆர். சிவக்குமார் … பிரதிவாதி

இந்த வழக்கானது 05.09.2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பாண்டியராஜன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் முன்னதாக வழக்கறிஞர் திரு. ஆர். ஜெகதீசன் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், வா.சா.1-ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது வாய்தா ஏற்பட்டிருந்த தருணத்தில் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வழக்கறிஞர் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து ரூ.18,68,000/-ம், அதன் அசல் தொகை ரூ.15,00,000/-ற்கு பிராது தேதி முதல் 12 சதவிகித வட்டியும் கிடைக்க உத்தரவிடக்கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்:**

இவ்வழக்கின் பிரதிவாதி அவரது அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவிற்காக வேண்டி வாதியிடம் கடந்த 02.04.2019 ஆம் தேதியன்று ரூ.15,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும் அசலையும் வாதிக்காவது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும்போது திரும்பச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடனுறுதிச் சீட்டினை அன்றையதினம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார். ஆனால் வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரடியாகவும், வகையாட்கள் மூலமாகவும் கடன் தொகையை திருப்பிச் செலுத்துமாறு கேட்டதில், பிரதிவாதி திருப்பித் தருவதாகக் கூறி வீண் காலதாமதம் செய்து வருகிறார். எனவே பிரதிவாதியிடமிருந்து கடன்

தொகையை வசூலிக்க வேண்டி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வழக்குரை சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாதியிடம், பிரதிவாதி யாதொரு கடன் தொகையும் பெற்றதில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே யாதொரு ஒப்பந்தமும், பண பரிவர்த்தனையும் கிடையாது. பிரதிவாதி செய்து வந்த தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக அதனை சரி செய்யவும், தொழிலை தொடர்ந்து நடத்தவும் பணம் தேவைப்பட்டதால் வாதியிடம் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாத வாக்கில் ரூ.5,00,000/-ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி கடனுக்கு ஆதரவாக நிரப்பப்படாததும், முத்திரை ஒட்டியதுமான அச்சிடப்பட்ட புரோநோட்டு படிவங்களை பிரதிவாதியிடம் வாதி பெற்றுக்கொண்டார். அதுபோன்று ஒப்புக்கொண்டபடி தினந்தோறும் ரூ.1,00,000/-ற்கு ரூ.300/- என்ற விகிதத்தில் வட்டியும் தவறாது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை செலுத்தி வந்தனர். பிரதிவாதிக்கு மீண்டும் தொகை தேவைப்பட்ட காரணத்தினால் வாதியிடத்தில் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாத வாக்கில் மீண்டும் ரூ.5,00,000/-ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு, வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மீண்டும் மேற்படி கடனுக்கு ஆதரவாக நிரப்பப்படாததும், முத்திரை ஒட்டியதுமான அச்சிடப்பட்ட புரோநோட்டு படிவங்களிலும், சில முத்திரைத் தாள்களிலும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகைக்கு தவறாது வட்டியும் செலுத்தியுள்ளார். 2014 ஆம் ஆண்டு வரை வட்டி செலுத்தி வந்தார். பின்னர் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக மேற்படி கடன் தொகையை செலுத்த இயலாமல் போய்விட்டது. இதன் காரணமாக பிரதிவாதி கொடுத்து வைத்திருந்த கையெழுத்திட்ட நிரப்பப்படாத காசோலையைப் பயன்படுத்தி அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் தவறானது. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. 02.04.2019 தேதிய புரோநோட்டில் கண்ட பிரதிபிரயோஜனமானது நிறைவேற்றப்படவில்லையா?
2. 02.04.2019 தேதியிட்ட புரோநோட்டின் நிறைவேற்றத்தை வாதி நிரூபித்துள்ளாரா?
3. வாதிக்கு வழக்கு தொகையானது வட்டியுடன் கிடைக்கக் கூடியதா?
4. வாதிக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரம் என்ன?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **எழுவினாக்கள் 1 முதல் 3 –ற்கான தீர்வு**:

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், பிரதிவாதி அவரது அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவிற்காக வேண்டி வாதியிடம் கடந்த 02.04.2019 ஆம் தேதியன்று ரூ.15,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து

கூடிய வட்டியையும் அசலையும் வாதிக்காவது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும்போது திரும்பச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடனுறுதிச் சீட்டினை அன்றையதினம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார். ஆனால் வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரடியாகவும், வகையாட்கள் மூலமாகவும் கடன் தொகையை திருப்பிச் செலுத்துமாறு கேட்டதில், பிரதிவாதி திருப்பித் தருவதாகக் கூறி வீண் காலதாமதம் செய்து வருகிறார். எனவே பிரதிவாதியிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க வேண்டி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிட்டிருக்கிறார்.

7. வாதி தரப்பு மேற்படி வாதத்தை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார். வா.சா.1 அவரது சாட்சியத்தில் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வாதிக்கு, பிரதிவாதி பிறப்பித்துக் கொடுத்துள்ள 02.04.2019 தேதியிட்ட புரோநோட்டின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 புரோநோட்டை பரிசீலனை செய்ததில், பிரதிவாதி, வாதியிடம் கடந்த 02.04.2019 ஆம் தேதியன்று ரூ.15,00,000/- ரொக்கக் கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக இந்த புரோநோட்டை பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. பிரதிவாதி தரப்பில், வாதியிடம் எவ்வித கடனும் பெறவில்லை என்றும், புரோநோட்டு பிறப்பித்துக் கொடுக்கவில்லை என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருந்தாலும், எதிர்வழக்குரையில் பின்னிட்டு 2011 மற்றம் 2012 ஆம் வருடங்களில் வாதியிடம் முறையே ரூ.50,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு மேற்படி கடனுன்களுக்கு ஆதரவாக வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நிரப்பப்படாததும், முத்திரை ஒட்டியதுமான அச்சிடப்பட்ட புரோநோட்டு படிவங்களிலும், சில முத்திரைத் தாள்களிலும் கையெழுத்து செய்து கொடுத்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வாதியின் வழக்குரை சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவித்து எதிர்வழக்குரை மட்டுமே பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். எனவே மேற்கண்ட வா.சா.1-ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 ஆவணம் ஆகியவற்றை பரிசீலினை செய்ததின் அடிப்படையில் பார்க்கும்போது, வாதியிடம், பிரதிவாதி கடந்த 02.04.2019 ஆம் தேதியன்று ரூ.15,00,000/-ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 காசோலையை பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பதும், ஆனால் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி வாதிக்கு, கடன் தொகையை திருப்பிச் செலுத்தாமல் இருந்து வருகிறார் என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது. எனவே வாதி கோரியவாறு பிராது தொகையான ரூ.18,68,000/-ம், அதன் அசல் தொகையான ரூ.15,00,000/-ற்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை வருடம் ஒன்றுக்கு 12 சதவிகித வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை வருடம் ஒன்றுக்கு 6 சதவிகித வட்டியும் பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கக் கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே எழுவினாக்கள் 1 முதல் 3-ற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத்கையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி ரூ.18,68,000/-ம், அதன் அசல் தொகையான ரூ.15,00,000/-ற்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி

வரை வருடம் ஒன்றுக்கு 12 சதவிகித வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை வருடம் ஒன்றுக்கு 6 சதவிகித வட்டியும் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்)ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 திரு. ராமச்சந்திரன்

**வாதி தரப்பு சான்றாவணம்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.04.2019 | வாதிக்கு, பிரதிவாதி ரூ.15,00,000/- ற்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள புரோட்டின் அசல் |

(ஒம்)ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
தென்காசி
அசல் வழக்கு எண்.212/2021
தீர்ப்புரை (நேரிய)
நாள்: 15.09.2023

---